தி. செல்வக் கேசவராய முதலியார், M. A.

தொகுத்துக் கோத்த

# பஞ்சலட்சணம்

"எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்."

சென்னை:

கி. க. அ. சங்கத்தார் அச்சுக்கூடம்.

1918.

விலை, 5 அணா.

# முகவுரை

நன்னூல் தன்னளவில் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் தர்க்க ரீதியாக உணர்த்துவதாயினும், அது பல விஷயங்களை இதரேதரமாக உரைத்தலால், இலக்கணம் கற்கப்புகுகின்ற மாணுக்கர்கள், பின் அறியத்தக்கவைகளை முன்னும், முன் அறியத்தக்கவைகளைப் பின்னுமாக அறிதல் வேண்டி இடர்ப்பட்டு, இலக்கணமென்ருல் வெறுப்புறுவா ராகின்றனர். நினைவில் வைப்பது அவசியமில்லாத பல சூத்திரங்களையும் உரையையும் உதாரணங்களையும் சில பண்டிதர்கள் உருவிடும்படி வலியுறுத்தலால் மாணுக்கர்களுக்கு இலக்கண மென்பது கைப்புறுவதாகின்றது. பிரயோகித்துக் காட்டப் பல விதத்தில் பயில்விக்காமல், சில விதிச்சூத்திரங்களை உருவிடும்படி வலியுறுத்திஞல், மாணுக்கர் நன்னூலைக் கையால் தீண்டவும் அஞ்சுவா ராகின்றனர். ஆகவே, எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கற்பிக்கத்தக்க முறையாக நன்னூல் சூத்திரங்களைத் தொகுப்பது இவ்விலக்கணச் சுருக்கத்தின் நோக்கம். சூத்திரங்களின் எண்கள் வலப்பக்கத்தில் இட்டிருக்கின்றன.

வசனநடையைப் போற்றற்குரிய இக்காலத்தில் வாக்கியங்களின் முடிபிலக்கணத்தை அறிவது ஒருதலை. இது பழைய இலக்கணங்களில் ஓரிடத்தில் ஒரு சீராக உரைத்திருப்பதில்லை. நன்னூலில் பல விடங்களில் உரைத்துள்ள சூத்திரங்களை ஓரிடமாகச் சேர்த்து வகைப்படுத்திக்கொள்ளின் வாக்கியலக்ஷணம் ஏறக்குறைய ஒழுங்காகும். இது செய்வதும் இவ்விலக்கணச் சுருக்கத்தின் நோக்கம்.

எழுத்தும் சொல்லும் உணர்ந்தார் செய்யுளிலக்கணமும் அணியிலக்கணமும் அறிவது முறை. இவையெல்லாம் அறிவது பொருளின் பொருட்டாதலால், அது இறுதியில் ஒருவாறு மிகச்சுருக்கமாக வசன ரூபத்தில் சேர்த்திருக்கிறது.

சுருக்கமான இப்பஞ்சலக்ஷணத்தை உணர்ந்தவர், பின் நன்னூல் தொல்காப்பியம் முதலியவற்றை எளிதில் கற்கலாகும்.

1903 ஸு அச்சிட்ட இச்சுருக்கம் இப்பொழுது சில நீக்கியும் சில சேர்த்தும் பதிக்கப்பெற்றுள்ளது.

தி சே.



சிவஞான முனிவர்.

# பஞ்சலட்சணம்.

## எழுத்து.

GOVERNMENT ORIENTAL M... FEB 1919 ... MADRAS

---

**எழுத்து.**

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே. (நன். 58)

**முதலெழுத்து.**

உயிரு முடம்புமா முப்பது முதலே. (59)
அம்முத லீரா றுவி: கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர். (63)
அ இ உ எ ஒக்குறி லைந்தே. (64)
ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔநெடில். (65)
அ இ உம்முதல் தனிவரிற் சுட்டே. (66)
எ யா முதலும் ஆ ஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினுவா கும்மே. (67)
வல்லினம் கசட தபறஎன வாறே. (68)
மெல்லினம் ஙஞண நமனஎன வாறே. (69)
இடையினம் யரல வழளஎன வாறே. (70)

**சார்பெழுத்து.**

உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
பஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும். (60)

- எழுத்து.
  - முதலெழுத்து.
    - உயிர்.
    - மெய்.
  - சார்பெழுத்து.
    - உயிர்மெய்.
    - ஆய்தம்.
    - உயிரளபெடை.
    - ஒற்றளபெடை.
    - குற்றியலிகரம்.
    - குற்றியலுகரம்.
    - ஐகாரக்குறுக்கம்.
    - ஔகாரக்குறுக்கம்.
    - மகரக்குறுக்கம்.
    - ஆய்தக்குறுக்கம்.

---

# II. சொல்.

இருதிணை.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை.
மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை. (261)

ஐம்பால்.

ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை. (262)

ஆண்பால் விகுதி—அன்—ஆன்—மன்—மான்—ன்.
பெண்பால் விகுதி—அள்—ஆள்—இ—ள்.
பலர்பால் விகுதி—அர்—ஆர்—கள்—மார்—ர்.

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. (263)

ஒன்றன்பால் விகுதி—து.
பலவின்பால் விகுதி—அ—வை—கள்—வ்..

மூவிடம்.

தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே. (266)

## பெயர்ச்சொல்.

பெயர்ச்சொல் (இன்னதென்பது.)

இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா.
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவும் ஆவன பெயரே. (275)

இடுகுறி மரபு. இடுகுறி யாக்கம்.
காரணக்குறி மரபு. காரணக்குறி யாக்கம்.

மரபு — தொன்றுதொட்டு வருவன. ஆக்கம் — தொன்றுதொட்டு வருதலின்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன.

தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்.

தன்மை யானான் யாநாம். முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ.
அல்லன படர்க்கை. எல்லா மெனல்பொது. (285)

பன்னிரண்டு பொதுப்பெயர்.

*தான்யா னுனீ யோருமை: பன்மைதாம்*
*யாநா மெலாமெலீர் நீயிர்நீர் நீவிர்.* (287)

தொழிற்பெயர்க்கும் வினையாலணையும்பெயர்க்கும் உரிய இடம்.

*வினையின் பெயரே படர்க்கை, வினையால்*
*அணையும் பெயரே யாண்டு மாகும்.* (286)

- தன்மை.
  - ஒருமை.
  - பன்மை.
- முன்னிலை.
  - ஒருமை.
  - பன்மை.
- படர்க்கை.
  - உயர்திணை.
    - ஆண்பால்.
    - பெண்பால்.
    - பலர்பால்.
  - அஃறிணை.
    - ஒன்றன்பால்.
    - பலவின்பால்.

படர்க்கைப் பெயர்ச்சொற்கள், பெரும்பான்மையாய், பொருள்-இடம் காலம்—சினை—குணம்—தொழில் என அறுவகைப்படும். சிறுபான்மை, சுட்டு-வினா—பிற—மன் என்னும் இடைச்சொற்களின் அடியாகவும் வரும்.

பண்புப்பெயர் விகுதி—மை—ஐ—சி—பு—உ—கு—றி—று—அம்—பம்—நர்.

தொழிற்பெயர் விகுதி—தல்—அல்—அம்—ஐ—கை—வை—கு—பு—உ—தி—சி—வி—உள்—காடு—பாடு—அரவு—ஆனை—மை—து—மதி—மானம்—ஆல்—இல்—வான்.

வினைமுதல்—செயப்படு—கருவிப் பொருண்மை விகுதி—இ—ஐ—அம்.

விகுதி பெறாத உயர்திணை அஃறிணைகளில் ஆண்பால் பெண்பால்களை உணர்த்திவரும் பெயர்கள். ஆடூஉ, மகடூஉ—களிறு—பிடி—கடுவன்—மந்தி, &c.

இருதிணைப் பொதுப்பெயர் (விரவுப்பெயர்)—தந்தை—தாய், ஆண்—பெண், செவியிலி—செவியிலிகள், தான்—தாம் என வருவன.

பால்பகா வஃறிணைப்பெயர்—ஒன்றன்பால் பலவின்பால் விகுதி பெறாது வரும் அஃறிணைப்பெயர். யானை—மரம், &c.

**வேற்றுமை.**

*ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்*
*வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.* (291)

முதல் வேற்றுமை.

*எழுவா யுருபு திரிபில் பெயரே.* (295)

இரண்டாம் வேற்றுமை.

இரண்டா வதனுரு பையே. அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதியாகும். (296)

மூன்றும் வேற்றுமை.

மூன்ரு வதனுரு பாலா ணேடொடு.
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள். (297)

நான்காம் வேற்றுமை.

நான்கா வதற்குரு பாகுங் குவ்வே.
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கிதெனல் பொருளே. (298)

ஐந்தாம் வேற்றுமை.

ஐந்தா வதனுரு பில்லு மின்னும்.
நீங்கலொப் பெல்லை ஏதுப் பொருளே. (299)

ஆறும் வேற்றுமை.

ஆற ஞெருமைக் கதுவு மாதுவும்,
பன்மைக் கவ்வு முருபாம். பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி ஞக்க மாந்தற் கிழமையும்,
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. (300)

ஏழாம் வேற்றுமை.

ஏழ னுருபுகண் ணுதி யாகும்.
பொருண்முத லாறும் ஓரிரு கிழமையின்
இடனுய் நிற்றல் இதன்பொரு ளென்ப. (301)

ஏழாம் வேற்றுமை உருபுகள்.

கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதேம் உழைவழி உழிஉளி
உள்அகம் புறம்இல் இடப்பொரு ளுருபே.

எட்டாம் வேற்றுமை.

எட்ட னுருபே எய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயற்
றிரிபு மாம்.பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே. (303)

## வினைச்சொல்.

தெரிநிலை வினைச்சொல் (இன்னதென்பது)

செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. (320)

குறிப்பு வினைச்சொல் (இன்னதென்பது)

பொருண்முதல் ஆறினுந் தோற்றிமுன் ஞறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே. (321)

வினைச்சொற்களின் வகை.

அவைதாம்,—
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவும் ஆகும். (322)

முக்காலம்.

இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே. (382)

இறந்தகால விடைநிலை.

தடறவொற் றின்னே ஐம்பால் மூவிடத்
திறந்த காலந் தருதொழி லிடைநிலை. (142)

நிகழ்கால விடைநிலை.

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை. (143)

எதிர்கால விடைநிலை.

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாம்இவை சிலவில. (144)

காலங்காட்டும் விகுதி.

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்,
தவ்வொ டிறப்பும் எதிர்வும், டவ்வொடு
கழிவும், கவ்வோ டெதிர்வும், மின்ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும், பாந்தம்
செலவொடு வரவும், செய்யுநிகழ் பெதிர்வும்,
எதிர்மறை மும்மையும், ஏற்கும் ஈங்கே. (145)

முற்றுவினை.

பொதுவியல் பாறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே. (323)

## முற்றுவினை விகுதி.

தன்மை.— { ஒருமை—கு—டு—து—று—அன்—என்—ஏன்—அல்.
பன்மை—அம்—ஆம்—எம்—ஏம்—ஓம்—கும்—டும்—றும்—தும்.

முன்னிலை.— { ஒருமை—ஐ—ஆய்—இ.
பன்மை—இர்—ஈர்.

படர்க்கை.— { ஆண்பால்—அன்—ஆன்.
பெண்பால்—அள்—ஆள்.
பலர்பால்—அர்—ஆர்—ப—மார்.
ஒன்றன்பால்—து—று—டு.
பலவின்பால்—அ—ஆ (எதிர்மறையில் மாத்திரம்.)

ஏவல்.— { ஒருமை { உடன்பாடு—ஆய்—இ.
எதிர்மறை—அல்—ஆல்—ஏல்.
பன்மை—மின்.

வியங்கோள்—க—ய—ர்—அ—அல்—தல்.

தெரிநிலை வினைமுற்று விகற்பம்.

ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்,
ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினும்,
முக்கா லத்தினு முரண, முறையே
மூவைந் திருமூன் றாறாய், முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானும். (324)

| | | இறப்பு. | நிகழ்வு. | எதிர்வு. |
|---|---|---|---|---|
| படர்க்கை. | ஆண்பால். | | | |
| | பெண்பால். | | | |
| | பலர்பால். | | | |
| | ஒன்றன்பால். | | | |
| | பலவின்பால். | | | |
| தன்மை. | ஒருமை. | | | |
| | பன்மை. | | | |
| முன்னிலை. | ஒருமை. | | | |
| | பன்மை. | | | |

பெயரெச்சம்.

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. (340)

பெயரெச்ச விகுதி.—அ—உம்.

**வினையெச்சம்.**

தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே. (342)

வினையெச்ச வாய்பாடுகளும் விகுதிகளும்.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச், செயச், செயின் செய்திய செய்தியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும். (343)

இறந்தகாலம்.—உ—பு—ஆ—ஊ—என (இ—ய்—உம்.)

நிகழ்காலம்.—அ.

எதிர்காலம் —இன்—இய—இயர்—வான்—பான்—பாக்கு (ஆல்—கால்—ஏல்—கடை—வழி—இடத்து.)

எதிர்மறை.—மல்—மை—மே—து—மைக்கு.

குறிப்பு.—அ—றி—து—ஆல்—மல்—கால்—கடை—வழி—இடத்து.

சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை. (346)

தெரிநிலை வினைப் பகுப்பு.

1. செயப்படுபொருள் குன்றியவினை.
   செயப்படுபொருள் குன்றாதவினை.
2. தன்வினை.
   பிறவினை.
   பிறவினை விகுதி.—வி—பி—கு—சு—டு—து—பு—று.
3. செய்வினை.,
   செயப்பாட்டுவினை.
   செயப்பாட்டுவினை விகுதி.—படு, உண்.
4. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொது வினை.— அழி—கெடு—வெளு—கரை—தேய் முதலியன.
5. செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை.
6. விதிவினை (உடன்பாடு).
   மறைவினை (எதிர்மறை).
   எதிர்மறை யிடைநிலை—இல்—அல்—ஆ.

## இடைச்சோல்.

இடைச்சோல் (இன்னதென்பது.)

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெனெண் பகுதியின் தனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஒரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல். (420)

சாரியையுரு பிடைச்சோற்கள்.

அன்ஆன் இல்அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே. (244)

உவமவுரு பிடைச்சோற்கள்.

போலப் புரைய வொப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே. (367)

தத்தம் போருள இடைச்சோற்கள்.

ஏ.

பிரிநிலை வினாவெண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே. (422)

ஒ.

ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே. (423)

என்.

வினைபெயர் குறிப்பிசை எண்பண் பாறினும்
எனவெனு மொழிவரும். என்றும் அற்றே. (424)

உம்.

எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை யெட்டே (425)

மன்.

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும். (432)

மற்று.

வினைமாற் றசைநிலை பிறிதெனும் மற்றே. (433)

கொல்.

கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே. (435)

அந்தில், ஆங்கு.

அந்திலாங் கசைநிலை இடப்பொரு ளவ்வே. (437)

அம்ம.

அம்ம உரையசை கேண்மினென் றாகும் (438)

தத்தம்பொருள இடைச்சொற்களில் மேலே கூறாதவற்றிற் சில.

1. முன்–பின்: காலப்பொருள்—இடப்பொருள்.
2. இனி: கால இடங்களின் எல்லைப்பொருள்.
3. தொறும் – தோறும்; இடப்பன்மைப் பொருள் – தொழிற்பயில்வுப் பொருள்.
4. வாளா–சும்மா: பயனின்மைப் பொருள்.
5. ஆவது–ஆதல்–ஆயினும்–தான்: விகற்பப்பொருள்.
6. அந்தோ – அன்னோ – ஐயோ–அச்சோ–அஆ–ஆஅ–ஒஓ: இரக்கப் பொருள்.
7. ஆ–ஆகா–அம்ம–அம்மா–ஓ–ஓகோ–அம்மம்மா – அச்சோ: வியப் புப்பொருள்.
8. கூ–கூகூ–ஐயோ–ஐயையோ–அச்சப்பொருள்.
9. சீ–சீசீ–சிச்சீ–சை: இகழ்ச்சிப்பொருள்.

## இசைநிறை யிடைச்சொற்கள்.

ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே. (436)

## அசைநிலை யிடைச்சொற்கள்.

யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ்
சின்குரை ஓரும் போலும் இருந்திட்
டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி. (441)

வியங்கோளசை.

மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல். (439)

முன்னிலையசை.

மியாயிக மோமதி அத்தை இத்தை
வாழிய மாளஈ யாழமுன் னிலையசை. (440)

### குறிப்பின்வரும் இடைச்சொற்கள்.

**ஒலிக்குறிப்பு** — அம்மெனை—இம்மெனை—கோவெனை—சோவெனை — துடுமெனை— ஒல்லெனை—சலேறெனை—சுலேறெனை—கடகடெனை — களகளென — திடுதிடெனை— நெறுநெறெனை—படபடெனை முதலியன.

**அச்சக்குறிப்பு.**—துண்ணெனை—துணுக்கெனை—திட்கெனை-திடுக்கெனை முதலியன.

**விரைவுக்குறிப்பு.**—பொள்ளெனை—பொருக்கெனை — கதுமெனை — ஞெரேலெனை— சரேலெனை முதலியன.

## உரிச்சொல்.

பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல் (442)

பல்வகைப் பண்பும் பகர்பெயர் = இசையும் குறிப்பும் பண்புமாகிய பலவேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயர். இசை—ஓசை. குறிப்பு—மனத்தால் குறித்துணரப் படுவது. பண்பு—பொறியால் உணரப்படும் குணம்.

**ஒருகுணந் தழுவிய உரிச்சொல்.**

சால உறுதவ நனிகூர் கழிமிகல். (456)

**பலகுணந் தழுவிய உரிச்சொல்.**

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும். (457)

**குறிப்பு.**—உரிச்சொல் குணத்தை மாத்திரம் காட்டும். பண்புப்பெயரும், தொழிற்பெயரும், பெயரெச்ச வினையெச்சங்களும், பெயர் வினைகளின் குணங்கூறுகளை விளக்குவனவாயினும், அவைகள் தத்தம் பாகுபாடுகளைப் பெற்றுவரும். உரிச்சொற்களோ, திணை பால் இடம் வேற்றுமை காலம் முதலிய பாகுபாடுகளைப் பெறுவதில்லை. முதனிலையும் இறுதி நிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருள் உணர்த்தல் உரிச்சொல்லிடத்து இயைபுடைத்தன்று. "எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே" என்பது தொல்காப்பியம். தொல்காப்பியம் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா", அதாவது, உறு தவ முதலாயின சொற்கு மிகுதி முதலாயின பொருளாதல் வரலாற்றுமுறைமையால் கொள்வதல்லது, அவை அப்பொருளாவதற்குக் காரணம் விளங்கத் தோன்றா என்றும் உரைக்கிறது.

# தொடர் மொழி.

பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி.

**தழுவுதொடர்.**—பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர்.

வேற்றுமை யைம்முத லாறும். அல்வழி
தொழில்பண் புவமை உம்மை. அன்மொழி
எழுவாய் விளிஈ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடக் கெனவீ ரேழே. (152)

**தொகாநிலைத் தொடர் மொழி.**

முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி அடுக்கிவை தொகாநிலை. (374)

**தொகைநிலைத் தொடர் மொழி.**

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல். (361)

வேற்றுமை வினைபண் புவமை உம்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும். (362)

**வேற்றுமைத் தொகை**

இரண்டு முதலாம் இடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே. (363)

**வினைத்தொகை.**

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. (364)

**பண்புத்தொகை.**

பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை. (365)

**உவமத்தொகை.**

உவம வுருபில துவமத் தொகையே. (366)

**உம்மைத்தொகை.**

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையுள் உம்மில தத்தொகை. (368)

அன்மொழித்தொகை.

ஐந்தொகை மொழிமேற் பிறதொக்கல் அன்மொழி. (369)

தொகைநிலைத் தொடர்மொழிகள் பல்பொருள் படுதல்.

தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப. (373)

தழாத்தொடர்.—நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர்.

இடைப்பிறவரல்.

உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன. (356)

தொடர் மொழி.

தழுவு தொடர்.

| தொகாநிலை. | | தொகைநிலை. |
|---|---|---|
| | வேற்றுமை. | |
| வேற்றுமைத்தொகாநிலைத்தொடர். | | வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். |
| | அல்வழி. | |
| எழுவாய்த்தொடர். | | வினைத்தொகை. |
| விளித்தொடர். | | பண்புத்தொகை. |
| வினைமுற்றுத்தொடர். | | உவமைத்தொகை. |
| பெயரெச்சத்தொடர். | | உம்மைத்தொகை. |
| வினையெச்சத்தொடர். | | அன்மொழித்தொகை. |
| இடைச்சொற்றொடர். | | |
| உரிச்சொற்றொடர். | | |
| அடுக்குத்தொடர். | | |

# புணர்ச்சி.

## புணர்ச்சி யிலக்கணத்தில் அறியத்தக்க எழுத்திலக்கணம்.

உயிர்மெய்.

ஆய்தம்.

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே. (90)

குற்றியலிகரம்.

யகரம் வரக்குற ளுத்திரி இகரமும்
அசைச்சொன் மியாவின் இகரமும் குறிய. (93)

குற்றியலுகரம்.

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே. (94)

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்.

பன்னீ ருயிரும் கசதந பமவய
ஞ ங வீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல். (102)
உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல். (103)
அ ஆ உ ஊ ஒ ஔ யம்முதல். (104)
அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல். (105)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| வ | வா | வி | வீ | — | — | வெ | வே | வை | — | — | வௌ |
| ய | யா | — | — | யு | யூ | — | — | — | — | யோ | யௌ |
| ஞ | ஞா | — | — | — | — | ஞெ | — | — | ஞொ | — | — |
| ங | — | — | — | — | — | — | — | — | — | — | — |

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்.

ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்
சாயு முகரம் நாலாறும் ஈறே. (107)

புணர்ச்சி (இன்ன தென்பது.)

மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்,
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளில் பொருந்துழி, நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே. (151)

இயல்புப் புணர்ச்சி.

விகார மனைத்து மேவல தியல்பே. (153)

விகாரப் புணர்ச்சி.

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும். (154)

செய்யுள் விகாரம்.

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் (155)
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே. (156)

## [புணர்ச்சி.]

உயிரீற்றின்முன் உயிர்.

இஈ ஐவழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏமுனிவ் விருமையும்,
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். (162)

வினாச்சுட்டின்முன் நாற்கணமும்.

எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்,
பிறவரின் அவையும், தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே. (163)

குற்றியலுகர முன்னும் சில முற்றியலுகர முன்னும் உயிரும் யகரமும்.

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்;
யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி. (164)

உயிரீற்றுமுன் வல்லினம்.

இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன்
கசதப மிகும்.வித வாதன மன்னே. (165)

அகரவீறு.

செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றூற னுருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே. (167)

ஆகாரவீறு.

அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா. (171)

இகர ஐகாரவீறு.

அல்வழி இஐம் முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும். (176)

முற்றியலுகரவீறு.

மூன்றா முருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகும் உகர முன்னர் இயல்பாம். (179)

குற்றியலுகரவீறு.

வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி. (181)

இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை. (182)

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. (183)

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே. (184)

ஏகார ஓகாரவீறு.

இடைச்சொல் ஏஓ முன்வரி னியல்பே. (201)

ஐகாரவீறு.

வேற்றுமை யாயின் ஐகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் ஏற்பவு முளவே. (202)

முன்னிலைவினை ஏவல்வினைமுன் வல்லினம்.

ஆவி யாழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே. (161)

வினாப்பெயர் விளிப்பெயர்முன் வல்லினம்.

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலியியல்பே. (160)

பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்முன் வல்லினம்.

பொதுப்பெய ருயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம். ஆவி யாமுன்
வன்மை மிகா. சில விகாரமாம் உயர்திணை. (159)

மெய்யீற்றின்முன் உயிர்.

உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே. (204)

தனிக்குறின் முன்னொற் றுயிர்வரின் இரட்டும். (205)

மெய்யீற்றின்முன் மெய்.

தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னு மென்று துணிநரு முளரே. (206)

ணகர னகரவீறு.

ணனவல் லினம்வாட் டறவும், பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்; கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே. (209)

குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணும் கேடே. (210)

மகரவீறு.

மவ்வீ றொற்றொழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும். (219)

வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்,
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள. (220)

நுந்தம்,

எம்நம் மீறு மவ்வரு ஞநவே. (221)

யரழவீறு.

யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும். வேற்றுமை
மிகலும் இனத்தோ றெழ்தலும் விதிமேல். (224)

லகர ளகரவீறு.

லளவேற் றுமையிற் றடவும், அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னும்.மெலி
மேவி னணவும், இடைவரின் இயல்பும்
ஆகும், இருவழி யானு மென்ப. (227)

குறில்வழி லளத்தவ் அணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே. (228)

குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரம் திரிந்தபின் கேடும், ஈரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும், வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன வுளபிற. (229)

வருமொழித் தகர நகரத்திரிபு.

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே. (237)

எல்லா ஈற்றின்முன்னும் மெல்லினமும் இடையினமும்.

எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்,
குறில்வழி யத்தனி யைநொது முன்மெலி
மிகலுமாம். ணளனல வழிநத் திரியும். (158)

புறனடை.

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவும் ஆகும் ஐயுருபே. (255)

இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே. (239)

# சொல்லாக்கம்

## (பதவியல்)

பதம் (இன்னதென்பதும் அதன் வகையும்.)

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருடரின்
பதமாம். அதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி இயலும் என்ப. (128)

ஓரெழுத் தொருமொழி.

உயிர்மவி லாறும் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகுநெடில், நொதுவாங் குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின. (129)

ஆ—ஈ—ஊ (flesh)—ஏ (arrow)—ஐ (beauty)—ஓ (floodgate).
மா—மீ (above)—மூ (old age)—மே (love)—மை—மோ (smell).
தா—தீ—தூ (purity)—தே (god)—தை.
பா (verse)—பூ—பே (foam)—பை—போ.
நா—நீ—நே (love)—நை (suffer)—நோ (pain).
கா (grove)—கூ (earth)—கை—கோ (king).
வா—வீ (death)—வை—வௌ.
சா (death)—சீ (Lakshmi)—சே (bull)—சோ (மதில்).
யா (which).
நொ (endure).
து (eat).
மற்றவை—கு—கௌ—பீ—வே.

தொடரெழுத் தொருமொழி. { பகாப்பதம். / பகுபதம்.

பகாப்பதம்.

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம். (131)

பகுபதம்.

பொருளிடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே. (132)

பகுபத வுறுப்புக்கள்.

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும். (133)

எண்ணுப் பெயர்கள்.

முதலிரு நான்காம் எண்முனர்ப் பத்தின்
இடையொற் றேகல் ஆய்த மாகல்
எனவிரு விதியும் ஏற்கு மென்ப. (195)

ஒருபஃ தாதிமுன் ஒன்றுமுத லொன்பான்
எண்ணும் அவையூர் பிறவும் எய்தின்
ஆய்தம் அழியவாண் டாகுந் தவ்வே. (196)

ஒன்றுமுதல் ஈரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னும் இற்றும்
ஏற்ப தேற்கும். ஒன்பதும் இனத்தே; (197)

இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட ஒற்றுனவ் வாகு மென்ப. (198)

ஒன்ப தொழித்தவெண் ஒன்பதும் இரட்டின்
முன்னதின் முன்னல ஓட உயிர்வரின்
வவ்வும், மெய்வரின் வந்தது மிகல்நெறி. (199)

செய்யுமெ னெச்சம்.

செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
(செய்யுளு ளும்முந் தாகலு) முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே. (341)

பெயர் வினைகள் ஈற்றயல் திரிதல்.

பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ ஆகலும் செய்யுளுள் உரித்தே. (353)

குறியதன்கீழ் ஆ

குறியதன் கீழாக் குறுகலும் அதனோ
டுகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின். (172)

இரட்டைக் கிளவி.

இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா. (396)

மொழி யிறுதிப்போலி.

மகர விறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே. (122)

மொழி முதற்போலி மொழியிடைப்போலி.

அஐ முதலிடை ஒக்குஞ் சஞயமுன். (123)

மொழியிடைப்போலி.

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழும் என்மரும் உளரே. (124)

எழுத்தின் சாரியைகள்.

மெய்கள் அகரமும், நெட்டுயிர் காரமும்,
ஐயௌக் கானு, மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற. (126)

வேற்றுமையுரு பேற்கையில் சொற்கள் பெறுஞ் சாரியை.

தான் தாம் நாம் முதல் குறுகும்: யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம்பிற:
குவ்வின் அவ்வரும். நான்கா றிரட்டல. (247)

ஆமா கோனவ் அணையவும் பெறுமே. (248)

ஒன்று முதலெட் டீறு மெண்ணூர்
பத்தின்முன் ஆன்வரின், பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடும். ஒன்பது மிற்றே. (249)

வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே. (250)

சுட்டின்முன் ஆய்தம் அன்வரிற் கெடுமே. (251)

வழக்கு.

இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகும் மூவகை இயல்பும்,
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல். (267)

வெளிப்படை குறிப்பு.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதலொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி: அல்லன வெளிப்படை. (269)

ஆகுபெயர்.

பொருண்முத லாறோ டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. (290)

மரபு.

எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. (388)

திசைச்சொல்.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப. (273)

வடசொல். { தற்சமம். தற்பவம்.

பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல். (274)

தற்பவம்.

ஏழாமுயிர் இய்யும் இருவும், ஐ வருக்கத்
திடையின் மூன்றும் அவ்வம் முதலும்,
எட்டே யவ்வும், முப்பது சயவும்,
மேலொன்று சடவும், இரண்டு சதவும்,
மூன்றே யகவும், ஐந்திரு கவ்வும்,
ஆவீ றையும், ஈயீ றிகரமும். (147)

ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்,
லவ்விற் கிம்முத லிரண்டும், யவ்விற்
கிய்யும், மொழிமுத லாகிமுன் வருமே. (148)

இணைந்தியல் காலை யரலக் கிகரமும்,
மவ்வக் குகரமு, நகரக் ககரமும்,
மிசைவரும். ரவ்வழி உவ்வு மாம்பிற. (149)

| உயிர் எழுத்து. | | | மெய் எழுத்து. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆரியம். | தமிழ். | தெலுங்கு. | ஆரியம். | தமிழ். | தெலுங்கு. | ஆரியம். | தமிழ். | தெலுங்கு. |
| 𑌅 | அ | అ | 𑌕 | க | క | 𑌨 | ந | న |
| 𑌆 | ஆ | ఆ | 𑌖 | — | ఖ | 𑌪 | ப | ప |
| 𑌇 | இ | ఇ | 𑌗 | — | గ | 𑌫 | — | ఫ |
| 𑌈 | ஈ | ఈ | 𑌘 | — | ఘ | 𑌬 | — | బ |
| 𑌉 | உ | ఉ | 𑌙 | ங | ఙ | 𑌭 | — | భ |
| 𑌊 | ஊ | ఊ | 𑌚 | ச | చ | 𑌮 | ம | మ |
| 𑌋 | — | ఋ | 𑌛 | — | ఛ | 𑌯 | ய | య |
| 𑍠 | — | ౠ | 𑌜 | — | జ | 𑌰 | ர | ర |
| 𑌌 | — | ఌ | 𑌝 | — | ఝ | 𑌲 | ல | ల |
| 𑍡 | — | ౡ | 𑌞 | ஞ | ఞ | 𑌵 | வ | వ |
| — | எ | ఎ | 𑌟 | ட | ట | 𑌶 | — | శ |
| 𑌏 | ஏ | ఏ | 𑌠 | — | ఠ | 𑌷 | — | ష |
| 𑌐 | ஐ | ఐ | 𑌡 | — | డ | 𑌸 | — | స |
| — | ஒ | ఒ | 𑌢 | — | ఢ | 𑌹 | — | హ |
| 𑌓 | ஓ | ఓ | 𑌣 | ண | ణ | — | ழ | — |
| 𑌔 | ஔ | ఔ | 𑌤 | த | త | 𑌳 | ள | ళ |
| 𑌂 | — | ం | 𑌥 | — | థ | — | ற | ఱ |
| 𑌃 | — | ః | 𑌦 | — | ధ | — | ன | — |
| — | ஃ | — | 𑌧 | — | ద | 𑌕𑍍𑌷 | — | క్ష |

| | ஆரிய எழுத்தின் எண். | தமிழில் திரியும் எழுத்து. |
|---|---|---|
| உயிர். | ௨ | ஐ |
| | ௬ | இ |
| | ௭ | இ, இரு, ,, |
| மெய். | ௨ | க |
| | ௩ | க |
| | ௬ | க |
| | ௭ | ச |
| | ௮ | ச, ய |
| | ௯ | ச |
| | ௧௨ | ட |
| | ௧௩ | ட |
| | ௧௬ | ட |
| | ௧௭ | த |
| | ௧௮ | த |
| | ௧௯ | த |
| | ௨௨ | ப |
| | ௨௫ | ப |
| | ௨௬ | ப |
| | ௩௦ | ச, ய |

| | ஆரிய எழுத்தின் எண். | தமிழில் திரியும் எழுத்து. |
|---|---|---|
| மெய். | ௩௧ | ச, ட |
| | ௩௨ | ச, த |
| | ௩௩ | அ, க |
| | ௩௫ | க்க |
| மூக்கில் தோன்றல். | ய | இ |
| | ர | அ, இ, உ |
| | ல | இ, உ |
| இடையில் தோன்றல். | ந | அ |
| | ம | உ |
| | ய, ர, ல | இ |
| | வ | உ |

# வாக்கியம்.

எழுவாய் பயனிலை.

எழுவா யுருபு திரிபில் பெயரே.
வினைபெயர் வினக்கொளல் அதன்பய னிலையே. (295)

எழுவாய்.

நீயிர் நீவிர்நான் எழுவா யலபெறு. (294)

திணைபால் வழுவமைதி.

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே. (379)

பாலிட வழுவமைதி.

ஒருமையிற் பன்மையும், பன்மையின் ஒருமையும்,
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே. (380)

எண்ணால் வரும் உயர்திணைப் பெயர்.

ஒருவன் ஒருத்திப் பெயர்மே லெண்ணில. (288)

ஒருவர் என்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப. (289)

அஃறிணை யிருபாற் பொதுப்பெயர்.

பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய. (281)

முற்றும்மை வேண்டும் எழுவாய்.

இனைத்தென் றறிபொருள் உலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும். (399)

முற்றும்மை ஒரோவழி எச்சமு மாகும். (426)

ஒரு பொருண்மேற் பல பெயர் வருதல்.

ஒருபொருண் மேற்பல பெயர்வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப; தனியும் ஒரோவழி. (392)

திணை வழுவமைதி.

உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின. (377)

ஒருபொருட் பன்மொழி.

ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா. (398)

திணைபால் மரபு வழுவமைதி.

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே. (378)

உம்மைத்தொகை.

உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே. (372)

செவ்வெண்.

செவ்வெண் ணீற்றதாம் எச்ச வும்மை. (427)

சில எண்ணிடைச் சொற்கள்.

பெயர்ச்செவ் வெண்ஏ என்று எனவெண்
நான்குந் தொகைபெறும். உம்மைஎன் றெனவோ
டிந்நான் கெண்ணுமஃ தின்றியும் இயலும். (428)

என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும். (429)

எழுவாயடை.

ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார். (397)

பொருண்முத லாறு மடைசேர் மொழிஇன
முள்ளவும் இல்லவு மாம்இரு வழக்கினும். (401)

அடைமொழி இனமல் லதுந்தரும் ஆண்டுறின். (402)

இயற்பெயர் பின்வரல்.

திணைநிலம் சாதி குடியே உடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடின் பின்வரல் சிறப்பே. (393)

அடை சினை முதல்.

அடைசினை முதல்முறை யடைதலும், ஈரடை
முதலோ டாதலும் வழக்கியல். ஈரடை
சினையொடு செறிதலும் மயங்கலுஞ் செய்யுட்கே. (403)

பயனிலை.

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல். (404)

யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால். (349)

எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால். (350)

இருதிணைப் பொதுவினை.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை. (330)

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

அம்மாம் என்பன முன்னிலை யாரையும்,
எம்மேம் ஓமிவை படர்க்கை யாரையும்,
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை. (332)

உளப்பாட்டுப் பன்மை முன்னிலை.

முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை. (334)

வியங்கோள் வினைமுற்று.

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப. (338)

வேறு, இல்லை, உண்டு.

வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன. (339)

செய்யுமென் முற்று.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே. (348)

கால வழுவமைதி.

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே. (383)

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி. (384)

ஆக்க வினைக்குறிப்பு.

ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா. (347

கருமத்தைக் கருத்தாவாகக் கூறுவது.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே. (400)

ஒரு பொதுவினை வேண்டுவன.

வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்,
வேறவற் றெண்ணும்; ஓர் பொதுவினை வேண்டும். (389)

சில வினைகளின் மரபு வழுவமைதி.

கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே. (409)

பயனிலையடை.

**வேற்றுமை முடிபு.**

எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்.
அல்ல வினைகொளும். நான்கேழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர். (319)

உருபு மயக்கம்.

யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். (317)

முதல் சினைத் தொடர்பு.

முதலை ஐயுறின் சினையைக் கண்ணுறும்:
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும். (315)

எல்லாம்: உருபேற்று வருதல்.

எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே.
அன்றேல் நம்மிடை அடைந்தற் றாகும். (245)

எல்லாரும் எல்லீரும்: உருபேற்று வருதல்.

எல்லாரு மெல்லீரும் என்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே. (246)

**வினையெச்ச முடிப்பு.**

முதலி னன்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும்: பிறவுமேற் கும்பிற. (344)

முற்றெச்சம்.

வினைமுற் றேவினை யெச்ச மாகலும்,
குறிப்புமுற் றீரெச்ச மாகலும் உளவே. (351)

சினைவினை.

சினைவினை சினையொடும் முதலொடும் செறியும். (345)

உருபு அல்லது எச்சம் பல அடுக்கிவருதல்.

உருபுபல அடுக்கினும், வினைவே றடுக்கினும்,
ஒருதம் மெச்சம் ஈறுற முடியும். (355)

முடிக்குஞ் சொல் நிற்குமிடம்.

எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும். (357)

## ஒழிபு.

திணைபாலிடம் பொதுமை நீங்கு நெறி.

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்,
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே. (359)

பாற்பொதுமை நீங்கு நெறி.

இருதிணை யாண்பெணுள் ஒன்றனை யொழிக்கும்,
பெயரும் வினையும் குறிப்பி னானே. (352)

திணையோடு விஞவிடையும் பாலோடு விஞவிடையும் வழுவாமற் காத்தல்.

ஐயந் திணைபால், அவ்வப் பொதுவினும்,
மெய்தெரி பொருண்மைமேல் அன்மையும் விளம்புப. (376)

பலபொரு ளொருசொல்லைச் சிறப்புச் சொல்லோடு முடித்தல்.

வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே. (390)

விஞவிடை சுருங்கு முறை.

தம்பா லில்ல தில்லெனின், இனனாய்
உள்ளது கூறி மாற்றியும் உள்ளது
சுட்டியும், உரைப்பர் சொற்சுருங் குதற்கே. (406)

குறிப்பெச்சம்.

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே. (408)

சொல்லெச்சம் = இசையெச்சம் = ஒழிந்துநிற்கும் சொற்கொண்டு
கருத்து முடிவது.

இசையறுத்துப் பொருள் துணிதல்.

எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளி வெய்து மென்ப. (391)

### [நூலுக்குப் புறனடை.]

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே. (462)

# III. யாப்பு.

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்.

## செய்யுளுறுப்பு.

எழுத்து—அசை—சீர்—தளை—ஓசை—அடி—தொடை.

"எழுதப் படுதலின் எழுத்தே. அவ்வெழுத்
தசைத்திசை கோடலின் அசையே. அசையியைந்து
சீர்கொள நிற்றலின் சீரே. சீரிரண்டு
தட்டு நிற்றலின் தளையே. அத்தளை
அடுத்து நடத்தலின் அடியே. அடியிரண்டு
தொடுத்துமன் சேறலின் தொடையே. அத்தொடை
பாவி நடத்தலின் பாவே. பாவொத்
தினமாய் வழங்கலின் இனமெனப் படுமே."

**எழுத்து.**—நன்னூலில் எழுத்தியலிற் கண்டுகொள்க.

**அசை**

- **நேரசை.**
  - குறில் தனித்து வருவது—அ.
  - குறில் ஒற்றடுத்து வருவது—அல்.
  - நெடில் தனித்து வருவது—ஆ.
  - நெடில் ஒற்றடுத்து வருவது—ஆல்.
- **நிரையசை.**
  - குறில் இணைந்து வருவது—வெறி.
  - குறிலிணைந்து ஒற்றடுத்து வருவது—நிறம்.
  - குறிலு நெடிலும் இணைந்து வருவது—சுறா.
  - குறிலு நெடிலும் இணைந்து ஒற்றடுத்து வருவது—விளாம்.

**சீர்.**—அசையுடன் அசை சேர்ந்து வருவது.

**அசைச்சீர்.** (ஓரசைச்சீர்.)

தனித்துவரு நேரசை—நாள்
குற்றியலுகரஞ் சேர்ந்து—காசு
தனித்துவரு நிரையசை—மலர்
குற்றியலுகரஞ் சேர்ந்து—பிறப்பு.

பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலே வரும்.

**இயற்சீர்.** (ஈரசைச்சீர் or அகவற்சீர் or ஆசிரிய உரிச்சீர்.)

நேர்—நேர்—தே—மா ................ வே தப்
நிரை—நேர்—புளி—மா ............ பொரு ளாய்
நிரை—நிரை—கரு-விளம் ......... விளங் கிய
நேர்—நிரை—கூ—விளம் ............ சங் கரன்.

**உரிச்சீர்.** (மூவசைச்சீர்.)

வெண்பா உரிச்சீர்.

நேர் — நேர் — நேர் — தே — மாங் — காய்
நிரை — நேர் — நேர் — புளி — மாங் — காய்
நிரை — நிரை — நேர் — கரு — விளங் — காய்
நேர் — நிரை — நேர் — கூ — விளங் — காய்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
தேமாங்காய் தேமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய்

சாந்துணையுங் கல்லாத வாறு.
கூவிளங்காய் தேமாங்காய் காசு.

வஞ்சி உரிச்சீர்.

நேர் — நேர் — நிரை — தே — மாங் — கனி
நிரை — நேர் — நிரை — புளி — மாங் — கனி
நிரை — நிரை — நிரை — கரு — விளங் — கனி
நேர் — நிரை — நிரை — கூ — விளங் — கனி.

மண்ணீரனல் வளிவானொடு
தேமாங்கனி புளிமாங்கனி

வெண்ணீர்மதி வெங்கதிருயி
தேமாங்கனி கூவிளங்கனி

ரெண்ணீருரு வியைபசுபதி
தேமாங்கனி கருவிளங்கனி

**பொதுச்சீர்** (நாலசைச்சீர்).—வஞ்சிப்பாவில் வரும். ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் குற்றுகரம் வந்துழி யன்றி வாரா.

தேமாந்தண்பூ — தேமாந்தண்ணிழல்
புளிமாந்தண்பூ — புளிமாந்தண்ணிழல்
கருவிளந்தண்பூ — கருவிளந்தண்ணிழல்
கூவிளந்தண்பூ — கூவிளந்தண்ணிழல்.
தேமாநறும்பூ — தேமாநறுநிழல்
புளிமாநறும்பூ — புளிமாநறுநிழல்
கருவிளநறும்பூ — கருவிளநறுநிழல்
கூவிளநறும்பூ — கூவிளநறுநிழல்.

அங்கண்வானத் தமரராசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தல் மங்கையரும்.

**தளை.**—நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை.

ஒன்றியேனும் { நேர் முன் நேர்
நிரை முன் நிரை }

ஒன்றாதேனும் { நேர் முன் நிரை
நிரை முன் நேர் }

கூடிநிற்பதாம்.

**ஆசிரியத்தளை.**
- நேரொன்றாசிரியத்தளை—
  உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை.
- நிரையொன்றாசிரியத்தளை—
  திருமழை தலைஇய விருணிற விசும்பின்.

ஈரசைச் சீர்நின் றினிவருஞ் சீரொடு
நேரசை யொன்றல் நிரையசை யொன்றலென்
றாயிரு வகைத்தே யாசிரி யத்தளை.

**வெண்டளை.**
- வெண்சீர் வெண்டளை—காய்முன் நேர்.
- இயற்சீர் வெண்டளை—மாமுன் நிரையும் விளமுன் நேரும்.

வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
என்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே.

**வஞ்சித்தளை.**
- ஒன்றிய வஞ்சித்தளை—கனிமுன் நிரை—வெண் சாமரை புடைபெயர்தர.
- ஒன்றாத வஞ்சித்தளை—கனிமுன் நேர்—மந்தா நிலம் வந்தசைப்ப.

தன்சீ ரிரண்டு தலைப்பெய றம்முளொத்
தொன்றினு மொன்றா தொழியினும் வஞ்சியின்
பந்த மெனப்பெயர் பகரப் படுமே.

**கலித்தளை.** காய்முன் நிரை வருவது.—

"செல்வப்போர்க் கதங்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி."
வெண்சீ ரிறுதிக் கிணையசை பின்வரக்
கண்டன வெல்லாங் கலித்தளை யாகும்.

**ஓசை.**—சீர்களின் புணர்ச்சியால் தோன்றித் தளைகளால் அமைந்த செய்யுட்களின் குணமாய் இசைப்பது.

1. செப்பலோசை.—வெண்பாவுக் குரியது.

(*a*) வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்பல் என்மனார் புலவர்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(*b*) இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்பல் என்மனார் புலவர்.

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(*c*) வெண்சீ ரொன்றலும் இயற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே ஒழுகிசைச் செப்பல்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

2. அகவலோசை.—அகவலுக்குரியது.

(*a*) நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்,
(*b*) நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்,
(*c*) ஆயிரு தளையுமொத் தாகிய வகவலும்,
ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்றிவை
ஆய்ந்த நிரனிறை யாகு மென்ப.

(*a*) ஏந்திசை யகவல்.—

போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே.

(*b*) தூங்கிசை யகவல்.—

அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.

(*c*) ஒழுகிசை யகவல்.—

ஞானே முந்தி தருகுவன் சிவனவன்
அடியின் ஓதா தூரனைக்
கடியின் பணித்தாற் கட்டவல் லார்க்கே.

3. துள்ளலோசை.—கலிப்பாவுக் குரியது.

(a) ஏந்திசைத் துள்ளல் கலித்தளை யியையின்.

(b) வெண்டளை தன்றளை யென்றிரண் டியையின்
ஒன்றிய அகவற் றுள்ளலென் றோதுப.

(c) தன்றளை பிறதளை வென்றிவை யனைத்தும்
பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல்.

(a) ஏந்திசைத் துள்ளல்.—
முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே.

(b) அகவற்றுள்ளல்.—
செல்வப்போர்க் கதங்கண்ணன்
செயிர்த்தெறிந்த சினவாழி. &c.

(c) பிரிந்திசைத் துள்ளல்.—
குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்ப, &c.

4. தூங்கலோசை.—வஞ்சிப்பாவுக் குரியது.

(a) ஒன்றிய வஞ்சித் தளையே வரினும்

(b) ஒன்றா வஞ்சித் தளையே வரினும்

(c) என்றிவை யிரண்டும் பிறவு மயங்கினும்.
ஏந்தல் அகவல் பிரிந்திசைத் தூங்கலென்
றாய்ந்த நிரனிறை யாகு மென்ப.

(a) ஏந்திசைத் தூங்கல்.—
வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை.

(b) அகவற் றூங்கல்.—
வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்.

(c) பிரிந்திசைத் தூங்கல்.—
மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தர.

அடி.—தளையினாலே இணைக்கப்பட்ட சீரோடு வருவது.

குறளடி.—இருசீரால் வருவது.
திரைத்த சாலிகை, நிரைத்த போனிரைந்
திரைப்ப தேன்களே, விரைக்கொள் மாலையாய்.

**சிந்தடி.**—மூன்று சீரால் வருவது.

நாக வாதையில் வன்றிறார்
தாணி மீதொரு கொன்பெறார்
சாரு லோகமு மின்புறார்
அருணை நாயக ரன்பறார்.

**அளவடி.**—நான்கு சீரால் வருவது.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

**நெடிலடி.**—ஐந்து சீரால் வருவது.

முன்னநின் னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குசிந்தி
கன்னமுங் கிள்ளிய நாளல்ல வேயென்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட வாண்பிள்ளாய்
இன்னமுஞ் சின்னவன் றானோ செந்தூரி லிருப்பவனே.

**கழிநெடிலடி.**—ஐந்து சீரின் மிகுத்த எனைத்துச் சீரானும் வருவது.

அறுசீர்.

பண்டு காம ரான வாறும் பாவையர் வாயமுதம்
உண்ட வாறும் வாழ்ந்த வாறு மொக்க வுரைத்திருமித்
தண்டு காலா வூன்றி யூன்றித் தள்ளி நடவாமுன்
வண்டு பாடுந் தண்டு லாயான் வதரி வணங்குதுமே.

எழுசீர்.

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யு நீள்விசும் பருளு
மருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரு மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டே
னாராய ணாவென்னு நாமம்.

எண்சீர்.

நந்தா விளக்கே யளத்தற் கரியாய் நரநா
ரணனே கருமா முகில்போல்
எந்தா யெமக்கே யருளா யெனநின் றிமையோர்
பரவு மிடமெத் திசையும்
கந்தா ரமந்தே னிசைபா டமாடே களிவண்டு
மிழற்ற நிழறு தைந்து
மந்தா ரனின்று மணிமல் குநாங்கூர் மணிமா
டக்கோயில் வணங்கென் மனனே.

குறளடி சிந்தடி யிருசீர் முச்சீர்,
அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்,
நிரனிறை வகையா னிறுத்தனர் கொளலே.
கழிநெடி லடியே கசடறக் கிளப்பின்,
அறுசீர் முதலா வையிரண் டீரு,
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே.

**தொடை.**—அடிகளிலும் சீர்களிலும் எழுத்துக்கள் இசையத்தொடுப்பது.

**1. எதுகைத் தொடை**—அடிகளில் முதலெழுத்துக்கள் மாத்திரை யளவில் ஒத்துநிற்க இரண்டாமெழுத்து இசையத் தொடுப்பது.

இரண்டா மெழுத்தொன் றியைவதே யெதுகை.

வருக்க எதுகை.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

நெடி லெதுகை.

ஆவாவென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூவென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்.

மெல்லின வெதுகை.

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

வல்லின வெதுகை.

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

இடையின வெதுகை.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

**ஆசெதுகை.**—ய்-ர்-ல்-ழ் ஏதாயினும் எதுகைக்கிடையில் வருவது.

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கைபோழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போய துண்டே.

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் பால்போல்.

2. **மோனைத்தொடை.**—முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களில் ஒன்றனுள்ளேனும் பலவற்றுள்ளேனும் முதலெழுத்து ஒன்றி வருவது.

அ — ஆ — ஐ — ஔ.
இ — ஈ — எ — ஏ.
உ — ஊ — ஒ — ஓ.
ச — த.
ஞ — ந.
ம — வ.

அகரமோ டாகார மைகார மௌவாம்
இகரமோ டீகார மெஏ—உகரமோ
டூகார மொஓ ஞந மவ தச் சகரம்
ஆகாத வல்ல வறு.

இணைமோனை —a—b.
பொழிப்புமோனை a—c.
ஒரூஉமோனை —a—d.
கூழைமோனை —a—b—c.
மேற்கதுவாய் —a—c—d.
கீழ்க்கதுவாய் —a—b—d.
முற்றுமோனை —a—b—c—d.

a–b– வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்.
a–c– அரிற்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி.
a–d– அகர முதல எழுத்தெல்லாம் ஆதி.
a–b–c– தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்.
a–c–d– விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகம்.
a–b–d– அவிர்மதி யனைய திருநுத லரிவை.
a–b–c–d– துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு.

இருசீர் மிசைவரத் தொடுப்ப திணையே.
முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்பே.
சீரிரண் டிடைதபத் தொடுப்ப தொரூஉத்தொடை.

மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை யென்மனர் குறியுணர்ந் தோரே.
முதலயற் சீரொழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே.
ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்.
சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே.

## செய்யுள். (பா.)

பா (செய்யுள்) நான்கு:—

| வெண்பா | அகவற்பா | கலிப்பா | வஞ்சிப்பா |
|---|---|---|---|
| செப்பல் | அகவல் | துள்ளல் | தூங்கல் |
| அளவடி | அளவடி | அளவடி | குறள்சிந்தடி |

பாவிகற்பம்.

### 1. வெண்பா.

குறள் வெண்பா.
சவலை வெண்பா.
நேரிசை வெண்பா.
இன்னிசை வெண்பா.
பஃறொடை வெண்பா.
நேரிசைச் சிந்தியல் வெண்பா.
இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

### 2. அகவற்பா.

நேரிசை யாசிரியப்பா.
இணைக்குற ளாசிரியப்பா.
நிலைமண்டில வாசிரியப்பா.
அடிமறிமண்டில வாசிரியப்பா.

### 3. கலிப்பா.

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.
அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.
வண்ணகக் கலிப்பா
கலிவெண்பா.
வெண்கலிப்பா.
தரவுக்கொச்சகக் கலிப்பா.
தரவிணைக் கொச்சகக் கலிப்பா.
சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

### 4. வஞ்சிப்பா.

குறளடி வஞ்சிப்பா.
சிந்தடி வஞ்சிப்பா.

**வெண்பா.**—ஈற்றடி முச்சீரடியாகவும் ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்றுக், காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் கொண்டு, மற்றச் சீருந் தளையும் பெறாது, காசு—பிறப்பு—நாள்—மலர் என்னும் வாய்பாட்டான் முடிவது.

செப்பல் இசையன வெண்பா மற்றவை
அந்தடி சிந்தடி ஆகலும் அவ்வடி
அந்தம் அசைச்சீர் ஆகவும் பெறுமே.

**குறள் வெண்பா.**—நாற்சீர் முச்சீர் என இரண்டடியாய் ஒரு விகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வருவது.

ஒருவிகற்பம்.

*உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்*
*களரனையர் கல்லா தவர்.*

இருவிகற்பம்.

*ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்*
*கருதி யிடத்தாற் செயின்.*

தொடையொன் றடியிரண் டாகி வருமேல்
குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே.

**சவலை வெண்பா.**—இரண்டு குறள் ஒரு விகற்பத்தால் வருவது.

*அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல*
*நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்*
*கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்.*

**நேரிசை வெண்பா.**—நான்கடியாய், இரண்டாமடி இறுதிச்சீர் தனிச் சொல்லாய் வர, அடிமுழுதும் ஒரெதுகையாகவேனும், முன்னிரண்டு மோரெதுகையும் பின்னிரண்டு மற்றோ ரெதுகையுமாகவேனும் வருவது.

ஒருவிகற்பம்.

*நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை*
*பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்—எண்ணுங்கால்*
*பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ*
*கண்ணவாத் தக்க கலம்.*

இருவிகற்பம்.

*பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்*
*கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்*
*பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை*
*நீரு மமிழ்தாய் விடும்.*

ஆசிடை நேரிசை வெண்பா.—நேரிசை வெண்பாவில் தனிச்சொற்கு முன் கூட்டப்படும் அசை—ஆசு—எனப்படும். ஆசு (பற்றுசு.)

**இன்னிசை வெண்பா.**—ஒரு விகற்பத்தாலேனும் பல விகற்பத்தாலேனும் நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி வருவது. (நாலடியாரில் உதாரணங்கள் காண்க).

பலவிகற்பம்.

*களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்*
*விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்*
*கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்*
*தலைநிலத்து வைக்கப் படும்.*

**பஃறொடை வெண்பா.**—நான்கடியின் மிக்க பலவடிகளைப் பெற்று வரும்.

*வையக மெல்லாங் கழனியா வையகத்துச்*
*செய்யகமே நாற்றிசையிற் றேயங்கள்—செய்யகத்து*
*வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்*
*சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட*
*கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுள்*
*தானேற்ற மாய சருக்கரை மாமணியே*
*ஆனேற்றான் கச்சி யகம்.*

**சிந்தியல் வெண்பா.**—மூன்றடியால் நேரிசை வெண்பாவைப்போல வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா என்றும், இன்னிசை வெண்பாவைப் போல வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்றும் பெயர் பெற்று வரும்.

நேரிசைச் சிந்தியல் வெண்பா.

*அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து*
*செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச்—சிறந்தார்*
*சிறந்தமை யாராய்ந்து கொண்டு.*

இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

*முறுவ லினிதுரை கானீர் மணிபாய்*
*கிடக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்*
*கூணொடு செய்யுஞ் சிறப்பு.*

**அகவற்பா.**—நாற்சீரான் வரும் அளவடியதாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்தளை தழுவியும், பிறதளை மயங்கியும், கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இருசீருங் கலவாது, மூன்று முதலிய பலவடிகளால் வருவது.

**நேரிசை யாசிரியப்பா.**—ஈற்றயலடி முச்சீரும் மற்றை யடிகளெல்லாம் நாற்சீருமாய் வருவது.

**இணைக்குற ளாசிரியப்பா.**—ஈற்றடியு முதலடியு மொத்து நடுவடிகளில் ஒன்றும் பலவும் இருசீரும் பலசீரும் குறைந்து வருவது.

**நிலைமண்டில வாசிரியப்பா.**—எல்லாவடியும் அளவொத்த நாற்சீரடிகளாக வருவது.

**அடிமறி மண்டில வாசிரியப்பா.**—எல்லாவடியும் அளவொத்து எவ்வடியை முதல் நடு ஈறு ஆக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்பது.

**கலிப்பா.**—வெண்சீர் மிகப்பெற்று — மாச்சீரும் விளங்கனிச்சீரும் பெறாது, பிறசீர்களும் சிறுபான்மை கலந்து, கலித்தளையும் அயற்றளையுந் தழுவி, தரவு—தாழிசை—அராகம் — அம்போதரங்கம் — தனிச்சொல் — சுரிதகம் என்னும் ஆறுறுப்பினுள் ஏற்பனகொண்டு நாற்சீரடியால் வருவது.

**வஞ்சிப்பா.**—பெரும்பாலும் தன்தளையும் சிறுபான்மை பிறதளையும் தழுவி, இருசீரடியாலேனும் முச்சீரடியாலேனும் மூன்று முதலிய பலவடிகளைக்கொண்டு, தனிச்சொல் பெற்று, அகவற் சுரிதகத்தான் முடிவது.

## பாவினம்.

நால்வகைப்பாவில் ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று இனமுண்டு. **தாழிசை—துறை—விருத்தம்** என்பன.

**வெண்பா.**

1. வெண்டாழிசை
2. வெண்டுறை
3. வெளிவிருத்தம்.

**கலிப்பா.**

1. கலித்தாழிசை
2. கலித்துறை
3. கலிவிருத்தம்.

**ஆசிரியப்பா.**

1. ஆசிரியத்தாழிசை
2. ஆசிரியத்துறை
3. ஆசிரியவிருத்தம்.

**வஞ்சிப்பா.**

1. வஞ்சித்தாழிசை
2. வஞ்சித்துறை
3. வஞ்சிவிருத்தம்.

இவற்றில் தற்காலம் மாணாக்கர் அறிதற்பாலனவாவன:—கலித்துறை வஞ்சித்துறை ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் வஞ்சிவிருத்தம்.

**கலித்துறை** (கலிநிலைத்துறை).—ஐஞ்சீரடி நான்கினைக்கொண்டு வருவது. நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை."

உதாரணம்.

யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.

**கட்டளைக் கலித்துறை.**—முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் நிற்பக் கடையொருசீரும் விளங்காயாகி வரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டு வருவது.

அது விளங்காயாய் வருவதன்றிச் சிறுபான்மை வேறுபட்டும் வரும். ஓரடிக்கெழுத்து, முதலசை நேராயின் பதினாறும், நிரையாயின் பதினேழுமாம்.

"முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிறைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே."

உதாரணம்.

ஆய்முத்தப் பந்தரின் மெல்லணை மீதுன் னருகிருந்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையி னித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச்சொன்னால்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவம்மையே.

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந் நாறுடலைப்
பிரிய முடன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே.

**வஞ்சித்துறை.**—இருசீரடி நான்குகொண்டு வருவது.

உதாரணம்.

மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்.

**விருத்தம்.**—எல்லாச்சீராலும் எல்லா அடிகளாலும் வந்து தளையின்றி நடக்கும். அதற்குரிய பொதுவிதியாவது, ஓரடியில் தேமா வந்தவிடத்து மற்ற அடியிலும் தேமாவாயினும் புளிமாவாயினும் வரும்; விளம் வந்த விடத்து மற்ற அடியிலும் கூவிளமாயினும் கருவிளமாயினும் வரும்; காயீற்றுச்சீருக்குக் காயீற்றுச்சீரும், கனியீற்றுச் சீருக்குக் கனியீற்றுச்சீரும் வரும். பிறவுமன்ன.

**வஞ்சி விருத்தம்.**—முச்சீரடி நான்குகொண்டு வருவது.

உதாரணம்.

சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயி
னீல வுண்கணிவள் வாழுமே.

**கலிவிருத்தம்.**—நாற்சீரடி நான்கினைக்கொண்டு வருவது.

உதாரணம்.

முடிச்சோதி யாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீநின்ற தாமரையா யலர்ந்ததுவோ
படிச்சோதி யாடையொடும் பூல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே.

**ஆசிரியவிருத்தம்.**—அளவொத்த கழிநெடிலடி நான்கினால் வருவது. உதாரணம் கழிநெடிலடிகளுக்குக் காட்டியன காண்க.

[எஞ்சிய யாப்பிலக்கணத்தை விரிந்தநூலிற் கண்டுகொள்க.]

# IV. அணி

அணியாவது, செய்யுட் கழகுசெய்து நிற்பதாம்.

[மாணுக்கர்கள் முதலில் அறியத்தக்க சில பொருளணி சொல்லணிகள் மாத்திரமே இங்கே விளக்கப்பட்டிருக்கின்றன.]

1. தன்மையணி.—அலங்கார விசித்திரங்களின்றிப் பொருள்களின் சுவபாவத்தை உள்ளபடியே கூறுவது. உ—ம்.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது.
யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்.
புதிய வண்ணுன் பொந்துகட்டி வெளுப்பான்.
அரைக்குடம் ததும்பும் நிறைகுடம் ததும்பாது.
வற்றிய ஓலை கலகலக்கும்.
ஊசியை ஊசிக்காந்தம் இழுக்கும்.

2. உவமை.—ஒரு பொருளோடு மற்ருெரு பொருட்குள்ள ஒப்புமை விளங்குவது.

ஒப்புமையானது தொழில்-பயன்-பண்பு (வடிவு-வண்ணம்) என்பன காரணமாகத் தோன்றும்.

தொழிலுவமை (வினையுவமம்).—உ—ம். "புலியன்ன மறவன்"—புலிபாயு மாறே பாய்வன் என்னுந் தொழில்பற்றி வந்தது.

பயனுவமை.—உ—ம். "மாரியன்ன வண்கை"—மாரியான் விளைவிக்கப்படும் பொருளும் வண்கையாற் பெறும் பொருளும் ஒக்கும் என்றவாறு.

வடிவுவமை.—உ—ம். "துடியிடை."—உடலின் மேற்பாகமும் கீழ்ப்பாகமும் அகன்று காட்டச் சுருங்கித்தோன்றும் இடைக்குத் துடி வடிவால் ஒக்கும்.

வண்ணவுவமை (உருவுவமை). — உ—ம். "பொன்மேனி." பொன்னின் கண்ணும் மேனியின் கண்ணும் உள்ள நிறமே ஒத்தன, பிற ஒத்தில.

உவமையின் உறுப்புக்கள் நான்கு:—உபமானம் (உவமை), உபமேயம் (பொருள்), சாதாரணதர்மம் (பொதுத்தன்மை), உபமாவாசகம் (உவமையுருபு).

விரியுவமை.—உவமையின் உறுப்புக்கள் நான்கும் விரிந்திருப்பது.
உ—ம். "பால்போலு மின்சொல்." இதில் பால்—உபமானம் (உவமை), சொல்—உபமேயம் (பொருள்), இனிமை—சாதாரணதர்மம் (பொதுத்தன்மை), போலும்—உபமாவாசகம் (உவமையுருபு).

தொகையுவமை.—உவமையின் உறுப்புக்கள் நான்கனுள் பொதுத்தன்மையாவது, உவமையுருபாவது, இவ்விரண்டுமாவது தொக வருவது.

உ—ம். "தண்டரளம் போன்முறுவல்" என்பதில் வெண்மையான என்கிற பொதுத்தன்மையும், "வேய்புரைதோள்" என்பதில் திரண்ட என்கிற பொதுத்தன்மையும் மறைந்திருக்கின்றன. "அம்பவளச் செவ்வாய்" என்பதிலும், "கமலச்செங்கண்" என்பதிலும் போன்ற என்ற உவமையுருபு மறைந்திருக்கின்றது. "பவழவாய்" என்பது பவழம்போலும் சிவந்த வாய் என்பதாதலால், இதில் உவமையுருபும் பொதுத்தன்மையும் மறைந்திருக்கின்றன: இங்ஙனமே "முத்தநகை" (முத்தம்போன்ற வெளுத்த நகை) என்பதிலும் அவ்விரண்டும் தொக்குகின்றன.

விபரீதவுவமை.—பொருளை உவமையாகவும், உவமையைப் பொருளாகவுங் கூறுவது. உ—ம்.

"மென்றோளெனத் திரண்ட வேயினங்கள்."

"மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்,
அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன,
தங்கொளி முறுவலிற் றரும நான்றன."

அற்புதவுவமை (இல்பொருளுவமை).—பூமியிலில்லாத வகையுடையதோர் பொருளை உவமானங் கூறுவது. உ—ம்.

"புண்டரி கத்தடங் காடு பூத்தொரு
கொண்டல்வந் திழிந்தெனக் கோலத் தான்றனைக்
கண்டனன் மனமெனக் களிக்குங் கண்ணினான்."

"உதிக்குஞ் சுருஞாயி றென்றே யுவமை
மதிக்கும் வடமலை மாயோன்."

பலபொருளுவமை.—ஒருபொருட்குப் பல உவமை காட்டுவது.

உ—ம். "பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற் கருமுனியா வானைக் கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா."

பொதுநீங் குவமை.—ஒரு பொருளுக்கு அதையே உவமானமாகக் கூறுவது.

உ—ம். ''இதுவலா நிதனுக் கியம்பலா முவமைமற் றியாதோ.''

''தன்னுக்கு முவமை யல்லால்
றனையொக்கு முவமை யுண்டோ.''

''நின்வாண்முகம் தானே யுவமை தனக்கு.''

**எடுத்துக்காட் டுவமை.**—பிம்பப் பிரதி பிம்பத் தன்மையால் இரண்டு வாக்கியங்களாய் வருவது. உ—ம்.

''ஊசியை ஊசிக்காந்த மிழுக்கும்,
உத்தமனைச் சிநேகம் இழுக்கும்.''

''கடுங்காற்று மழைகூட்டும்,
கடுஞ்சிநேகம் பகைகாட்டும்.''

''முற்று நனைந்தவனுக் கீரமில்லை,
முழுதுங் கெட்டவனுக்குத் துக்கமில்லை.''

''அகர முதல வெழுத்தெல்லாம்: ஆதி
பகவன் முதற்றே யுலகு.''

**சிலேடை யுவமை.** — சிலேடை வகையால் பொதுத்தன்மை ஒன்றுபட்டிருப்பது.

''நாலு திசைமுகமு நண்ணுதலா லொண்கமலம்
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே.''

3. **உருவகம்.**—உபமானத்தையும் உபமேயத்தையும் வேறுபாடில்லாமல் இருபெயரொட்டாக ஒற்றுமைப்படுத்தி உரைப்பது அஃதாவது, உவமையைப் பொருளாகவும் பொருளை உவமையாகவும் கூறுவது. ஆகிய என்பது உருவக உருபு. அது விரிந்துவரின் விரியுருவகமும், மறைந்துவரின் தொகையுருவகமுமாம். உ—ம்.

முறையே, பாதமாகிய தாமரை, பாததாமரை.

**இயைபுருவகம்.**—ஒரு தொடர்பினுள் பலபொருளையும் உருவகஞ்செய்யுங்கால் தம்முள் காரண காரியம் இயைபுடைத்தாக வைத்து உருவகஞ்செய்வது. உ—ம்.

''நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.''

படை, அமைச்சு, முரசு முதலியன அரசின் அங்கமாதலின் இவை புடையவாயின.

**ஏகதேச உருவகம்.**—ஒரு செய்யுளகத்து ஓரிடத் தொருபொருளை உருவகஞ் செய்யுங்கால் மாட்டேறு பெற உருவகஞ்செய்து, அப் பொருளொடு சம்பந்தமுறப் பிறிதோர் பொருளை அச்செய்யுளகத் துப் பிறிதோரிடத்து மாட்டேறுபெற உருவகஞ்செய்யாது, தொகை நிலை வாய்பாட்டாற் கூறுவது என்பர் மாறனலங்காரமுடையார்.

கருமமாவது கருவியாவது ஒன்றனை உருவகஞ்செய்து ஒன்றனை வாளாது கூறுதல் என்றது இலக்கணவிளக்கம். உ ம்.

"அறியாமை யென்னும் அகவிருளைச் சீக்கப்
பிறியா தறிவிருக்கப் பெற்றும்—குறியாத
தீச்சொற் பயில்வரே செண்பகமா றன்பவள
வாய்ச்சொற் றிறம்பயிலா மல்."

அறியாமையென்னும் அகவிருளை என மாட்டேறுபெற உருவகஞ்செய் ததனோடும், எதிராகச் சம்பந்தமுற ஞானமாம் விளக்கு என மாட்டேறு பெற உருவகஞ் செய்யாது, தொகைநிலை வாய்பாட்டான் அறிவு எனக் கூறியிருக்கின்றது.

"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது."

இதில் தாளைத் தெப்பமென்னாமையால் இதுவுமது.

"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து."

இதில் உரனைத் தோட்டி என்றதற் கேற்ப, ஓரைந்தாகிய யானை என்னா மையால் இதுவுமது.

**முற்றுருவகம்.**—அவயவ அவயவிகள் எல்லாவற்றையும் உருவகப் படுத்துவது. உ-ம்.

"வட்ட வதன மதியு நுதற்பிறையும்
பெட்ட நகைநிலவும் போர்த்தறியாக்—கட்டளகக்
கங்குலின்மேன் மாறன் கனவரைவண் டீரிருந்தால்
இங்கிவளுக் குண்டோ விடை."

"விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல்—பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை முகமே
தாமரையென் னுள்ளத் தடத்து."

4. **வேற்றுமை.** — உபமான உபமேயங்களுக்கு ஏதேனும் ஒரு வேற்றுமையைக் காட்டுவது. உ-ம்.

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்."

5. **ஒட்டு** (பிறிது மொழிதல்). — குறித்த பொருளை மறைத்து, அதனைப் புலப்படுத்தும்பொருட்டு, அதனோடொத்த வேறொரு பொருளைக் கூறுவது. அஃதாவது, உபமானத்தினாலே உபமேயம் அறியும்படி சொல்வது என்பதாம். உ-ம்.

"நெடும்புனலுள் வெல்லு முதலை. அடும்புனலின்
நீங்கி னதனைப் பிற"

"கடலோடா கால்வ னெடுந்தேர். கடலோடு
நாவாயு மோடா நிலத்து"

"காலாழ் களரி னரிபடும் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு"

என வருங் குறள்கள், அரசர் தமக்குச் சாதகமும் பகைவர்க்குப் பாதகமுமான இடத்தில் நின்று சண்டைசெய்க என்னும் கருத்துடையனவாதலால் ஒட்டணியாம். எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும், அவர் ஒருங்குசேர்ந்தவிடத்து வலியழிவான் என்னுங் கருத்து

"பீலிபெய் சாகாடு மச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

என உரைத்திருக்கின்றது.

ஒருவனது குணத்துக்கு இணங்கி நடப்பவனாயிருந்தும் அவனைப் பகைவன் அழிப்பான் என்னும் பொருளை, "தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்" எனவும், பெரியோர் கோபித்தெழுந்தால் அவரைத் தடுப்பவர் எவருளர் (ஒருவருமில்லை) என்னுங் கருத்தை, "கடல் கொதித்தால் விளாவ நீர் எங்கே," "கடல் பெருகினால் கரையேது" எனவும் இங்ஙனம் வருவனவும் ஒட்டணி.

6. **ஒப்புமைக் கூட்டம்.** — உயர்வினாலேனும் இழிவினாலேனும் சிறந்தவைகளுடன், ஒரு பொருளைக் கூட்டி யுரைப்பது. சமத்தன்மை யுடையவைகளை ஒருங்கு கூட்டுதல் என்பது சொல்லின்படி பொருள். உ-ம்.

"ஆறு நேரான ஊரும், அரசனோ டெதிர்த்த குடியும், புருஷனோடேறுமாறான பெண்ணும், நீறு நீறாகி விடும்."

"காட்டில் புதைத்த் கனதனமும் கவிவாணர்
பாட்டி லமைத்த பழம்பொருளும்—வீட்டின்
மனையாள் குணமும் மழைபெய்யு நாளும்
அறிவையே யாரு லறை."

நான்மணிக்கடிகை — இன்னாநாற்பது — இனியாநாற்பது முதலியவற்றின் பாக்களும் இதற்குதாரணமாகும்.

7. தற்குறிப் பேற்றம்.—அசையும் பொருள் அசையாப் பொருள் என்னும் இருவகைப் பொருளின் கண்ணும் இயல்பாக எய்திய தன்மைக் கூறுபாட்டை விலக்கிப், பிறிதொரு காரணத்தால் விளைந்ததெனக் கவியானவன் விதித்துட்கொண்டதனை, அதன் கண்ணதாக ஏற்றுவதாம். ஒரு விதமாய் இருக்கும் பொருளை வேறொரு விதமாய்ச் சிந்தித்துச் சொல்வது. கவி தன் குறிப்பை யேற்றுதல் என்பது சொற்பொருள். இவ்வணி அன்ன போல என்பன முதலிய உவமச்சொல் புணர்ந்து விளங்கும் தோற்றமும் உடைத்து. உ—ம்.

"வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத்—தானுடைய
தாதுமே தக்க மழவுந் தடஞ்சினையாம்
போதுமீ தேந்தும் பொழில்."

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து."

"மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா."

8. ஐயவணி (சந்தேகம்)—ஒப்புமையினாலே ஒரு பொருளைக் கண்டு இதுவோ அதுவோ எனச் சந்தேகித்தலாம். உ—ம்.

"தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவும் வாண்முகங்கொல்—யாதென்
றிருபாற் கவர்புற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம்."

**9. மயக்கவணி** (பிராந்தி).—ஒப்புமையினாலே ஒரு பொருளை மற்றொரு பொருளாக அறிதலாம். உ-ம்.

"மழைக்கண் மங்கையர் பயிறா மரகத மணியின்
இழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த பைந்தரு நீழலிற் குலவுமா னினங்கள்
தழைத்த புல்லென விரைவொடு தணித்தணி கறிக்கும்"

**10. அதிசயம்.**—கவியால் கருதப்பட்ட ஒரு பொருளது வனப்பை மிகுத்துச் சொல்லுங்கால் உலகநடை யிறவாத தன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்பத் தோன்றுவது. உ-ம்.

"பண்டு புரமெரிப்ப மேன்மேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி."

"உள்ளம் புகுந்தே யுலாவும் ஒருகாலென்
உள்ள முழுதும் உடன்பருகும்—ஒள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வேன்
உள்ளம் பெரிதோ வுரை."

**11. உதாத்தம்** (வீறுகோளணி).—உள்ளமிகுதி செல்வமிகுதி என்னும் இரண்டையும் விசேஷித்துரைப்பது (பெருமை சிறுமைகளை வியந்துரைப்பது அதிசயவணி.). உ-ம்.

உள்ளமிகுதி.

"மண்ணகன்று தன்கிளையி னீங்கி வனம்புகுந்து
பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்றான்—எண்ணிறந்த
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு."

செல்வமிகுதி.

"பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதக
நற்சிறா ரூர்தலி னங்கை மார்விரீஇ
உற்றனர் கோழிமே லெறிந்த வொண்குழை
மற்றத்தே ருருள்கொடா வளமை சான்றவே,"

12. **விசேடம்**.—ஒருவன் செய்யுங் காரியத்தில் சிறப்புத்தோன்ற அதன் கருவிகளில் குறைபாடு கூறுவது. உ-ம்.

"தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை."

"யானை யிரதம் பரியா ளிவையில்லைத்
தானு மனங்கன் றனுக்கரும்பு—தேனார்
மலரைந்தால் வென்று வடுப்படுத்தான் மாரன்
உலகங்கண் மூன்று மொருங்கு."

"நறைத்துள வம்புனை நம்பெரு மாள்விற லுஞ்சொல்வதோ
மறைப்பரி பூட்டிய மாநிலத் தேரில்லை வாளெயிற்றின்
கறைப்பணி நாணுடை மேருவில் லில்லை கடும்பவளச்
சிறைத்தழ லம்பில்லை ஒன்னா ரறுபுரஞ் செற்றதற்கே."

13. **மேன்மே லுயர்ச்சியணி**.—மேன்மேலும் ஒன்றற் கொன்று உயர் குணத்தாலேனும் இழிகுணத்தாலேனும் உயர்வாதலைச் சொல்லுவது. உ-ம்.

"தேன்மதுர மாமதனிற் றெள்ளமுத மேமதுர
மான்சொலதி னும்மதுர மாம்." இது உயர்வு.

"நீரினு நுண்ணிது நெய்யன்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பம்—தேரின்
நிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து." இது இழிவு.

14. **புகழாப்புகழ்ச்சி** (வஞ்சப் புகழ்ச்சியணி). — ஒருபொருளைப் பழிப்பதுபோல் விளங்கிப் புகழைத் தரும்படி கூறுவதும், புகழ்வதுபோல விளங்கிப் பழிப்பைத் தரும்படி கூறுவது மாம். உ-ம்.

"வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பா லடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை யம்பல வாணர்க்கோ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோவிங்ங னேயெளி தானதுவே."

"தேவ ரனையர் கயவர் அவருந்தா
மேவன செய்தொழுக லான்."

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்."

15. வேற்றுப்பொருள் வைப்பு.—ஒரு வாக்கியப்பொருளைக் கூறி நாட்டி அதனை உறுதிப்படுத்தற்கு மற்றொரு வாக்கியப் பொருளைக் கூறி வைப்பது. இங்ஙனங் கூறப்பட்ட இரண்டாவது பொருள் முந்தினதை நன்கு விளக்குவதாகும்; அதாவது பொதுப்பொருளால் சிறப்புப்பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப்பொருளையும், சாதிப்பதாகும். உ-ம்.

"புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்."

"சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்றா லொன்றொழித் தொன்றையுன்ன
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்க லாமோ."

16. ஏது.—இன்ன காரணத்தால் இது நிகழ்ந்ததென்று ஒரு பொருளுக்குச் சாதனங் கூறுவது. உ-ம்.

"எல்லைநீர் வையகத் தெண்ணிலறைந்த வெவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால்—முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வீழ்ந்த புயல்."

"காதலன் மேலூடல் கரையிறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வெயர்ப்ப வாய்துடிப்ப—மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து."

17. காரணமாலை.—பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றைக் காரணமாகவேனும் காரியமாகவேனும் உரைப்பது. உ-ம்.

"நீதி யாற்செல்வ நிகழ்செல்வத் தாற்கொடைமற்
றோதுகொடை யாற்சீ ருள."

இதில் நீதி முதலியன செல்வ முதலியவற்றிற்குக் காரணமாகின்றன.

"படர்நரகம் பாவத்தாற் பாவ மிடியான்
மிடியீ விலாமையினா மே."

இதில் நரக முதலியன பாவ முதலியவற்றிற்குக் காரியமாகின்றன.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை. மழையும்
தவமிலா ரில்வழி யில்லை. தவமும்
அரசிலா ரில்வழி யில்லை. அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்."

"கற்பக் கழிமட மஃகும். மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகின் கோளுணரும். கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும். அந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ உப்பால்
உயர்ந்த வுலகம் புகும்."

18. பரிவர்த்தனை.—ஒருபொருளைக் கொடுத்து ஒருபொருளை மாற்றிக்கொண்டதாகக் கூறுவது. உ—ம்.

"சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து."

"சிந்தனை யுனக்குத் தந்தேன், திருவரு ளெனக்குத் தந்தாய்.
வந்தனை யுனக்குத் தந்தேன், மலரடி யெனக்குத் தந்தாய்.
பைந்துணை ருனக்குத் தந்தேன், பரகதி யெனக்குத் தந்தாய்.
கந்தனைப் பயந்த நாதா! கருவையில் வாழுந் தேவே!

19. விரோதம்.—ஒன்றுக்கொன்று விரோதமான பொருள்களைச் சேர்த்துக் கூறுவது. உ—ம்.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கம். தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்."

"காலையு மாலையுங் கைகூப்பிக் காளெழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாம்.—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து."

20. பின்வருநிலை. — ஒரு செய்யுளில் முன்வந்த சொல்லாவது பொருளாவது பலவிடத்துப் பின்னும் வருதல். உ—ம்.

சொற்பின் வருநிலை.—

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்."

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

பொருட்பின் வருநிலை.—

"அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை."

21. சிலேடை.—உச்சரிக்கும்போது ஒருவகையால் நின்ற சொற்றொடர் வெவ்வேருன பலபொருள் கொள்ள வருவது. அது, சொற்கள் நின்றநிலை குலையாமல் பல பொருள்படும் செம்மொழிச் சிலேடை யெனவும், தொடர்ந்து நின்ற சொற்களைப் பிரித்துத் தொகை வேறு படுத்திப் பல பொருள் கொள்வதான பிரிமொழிச் சிலேடை யெனவும் இரண்டு வகைப்படும். உ—ம்.

செம்மொழிச் சிலேடை.—

"நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதன்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்துப் பற்பட்டான் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பா யுஞ்சோலைத் திருமலைரா யன்வரையிற்
பாம்பாகும் வாழைப் பழம்."

பிரிமொழிச் சிலேடை.—

"கண்ணும் மொழியுங் கரும்பிணையாம்."

கரும்பிணை என்பது கண்ணொடு பொருத்துங்கால் கரியபிணை (மான்) என்றும், மொழிக்குப் பொருத்துங்கால் கரும்பு இணையாம் என்றும் கொள்ள நிற்கின்றது.

22. நிரனிறை.—வரிசையாக நிறுத்திய சொற்பொருள்களை அம்முறை நிறுத்திய சொற்பொருள்களோடு பொருந்தவைத்தல். வரிசையாக நிறுத்தப்படுவது என்பது சொற்பொருள்.

"புல்லையும் புனலையுங்கொண்டு பிழைக்கும் மான் மீன்களுக்கு வேடனும் செம்படவனும் ஏதுவில்லாமலே பகையாகின்றனர்." இது நேர்நிரனிறை. எதிரெதிராக அடுக்கிவருவது எதிர் நிரனிறை. உ—ம்.

"ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

வெஃகாவில் கிடந்தான், பாடகத்தில் இருந்தான், ஊரகத்தில் நின்றான் எனக்கொள்ளக் கிடத்தலால் எதிர்நிரனிறையாம்.

23. புணர்நிலை. (Zeugma).—ஒரேதொழில் அல்லது ஒரேகுணம் இரண்டு பொருளுக்குப் பொருந்தக் கூறுவது. கூடி நிற்கும் வலியினால் இருபொருளுக்கும் முடிவு ஒரு வாசகமாக வருவது. இவ்வணியில் ஒடு—ஓடு—உடன் என்பன வருவது இயல்பு. உ-ம்.

"வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த—ஆண்டகையோர்
மேவல் விரும்பும் பெருநசையால் மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர் கண்."

கண் முகில் என்னும் இருபொருட்கும் உடனிகழ்ச்சிபற்றி 'நீர்பொழிந்த' என ஒரு வாசகம் புணர்ந்துநிற்கக் கூறியவாறு கண்டுகொள்வது.

"பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போதுடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால்—தாங்காதல்
வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி
உய்க்குந் தமியோ ருயிர்."

இங்கே தமியோருயிர் மாலைப்போது என்னும் இருபொருளையும் 'வெம்மையவாய் நீண்டன' என ஒரு வாசகத்தான் முடித்திருக்கின்றது.

24. மடக்கு.—எழுத்தின் கூட்டம் இடைவிட்டேனும் இடைவிடாதேனும் பொருள் வேறுபடுமாறு மீண்டும் வருவது. உ-ம்.

"வேலையுலகிற் பிறக்கும்
வேலையொழிந்தோமில்லை."

"ஆரவாரத்தினோடு மருவியே
ஆரவாரத்தினோடு மருவியே."

ஆர — நிறைய, ஆரத்தினோடு — முத்தோடு, மருவி — சேர்ந்து, ஆரவாரத்தின் — பேரிரைச்சலோடு, அருவி ஓடும் — அருவி ஓடும்.

"சோலைத்-தருமாதரை நட்டான் றண்முல்லையாயர்
தருமாதரை நட்டான் சார்பு."

சோலைத்தருவை மா (பெரிய) தரையிலே நட்டான்: ஆயர் தரு (பெற்ற) மாதரை நட்டான் (நட்புக் கொண்டவன்.)

# V. பொருள்.

பொருளாவது செய்யுளிற் கூறப்பட்ட விஷயம். அது அறம் பொருள் இன்பம் என மூன்று வகைப்படும். மனத்தால் நோக்குதற்கு எட்டாத வீடு, துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது இலக்கணவகையால் கூறுதற்கு எட்டாமையின், நூல்கள் அதனை விரித்துரைப்ப தில்லை. அங்ஙனம் அறம்பொருள் இன்பம் என விரித்துக் கூறப்படும் பொருளே, தொகுத்துக்கூறும் தமிழ் நடையான், அகப்பொருளும் புறப்பொருளுமென இருவகைத்தாம்.

பொருள்.
- அகப்பொருள்.—இன்பம்.
- புறப்பொருள்.
  - அறம்.
  - பொருள்.

அகப்பொருளாவது, இன்பமென்னும் பொருளாம். அது ஒத்த அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் கூடிய கூட்டத்திற் பிறந்து அவருள்ளத்தின்கண் நிகழ்வதாகலின் அகப்பொருள் எனப்பெறும். அது அகத்திணை எனவும் படும்.

அவ்வகப்பொருள் கைக்கிளைத்திணையும் ஐந்திணையும் பெருந்திணையும் என்னும் இவ்வேழினையும்பற்றி நிகழும். இவற்றுள், கைக்கிளை என்பது ஒருதலைக்காமம்; ஐந்திணை என்பது அன்புடைக் காமம்; பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். ஐந்திணை என்றவற்றிற்குப் பொருந்திய பெயராவன குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்பனவாம்.

அகப்பொருள்.
- கைக்கிளை.
- ஐந்திணை.
  - குறிஞ்சி.
  - பாலை.
  - முல்லை.
  - மருதம்.
  - நெய்தல்.
- பெருந்திணை.

அவற்றுள் குறிஞ்சியாவது, புணர்ச்சியும் அதன் நிமித்தமும். பாலையாவது, பிரிதலும் அதன் நிமித்தமும். முல்லையாவது, இருத்தலும் அதன் நிமித்தமும். மருதமாவது, ஊடலும் அதன் நிமித்தமும். நெய்தலாவது, இரங்கலும் அதன் நிமித்தமும். இவை அகப்பொருளிலக்கணத்தில் **உரிப்பொருள்** எனப்படும். இவ்வொழுக்கங்களுக்குரிய நிலமும் பொழுதும் **முதற்பொருள்** எனப்படும்.

இவ்வொழுக்கங்களில், குறிஞ்சிக்குரிய நிலம், மலையும் மலை சார்ந்த இடமும். பாலைக்குரிய நிலம், சுரமும் அதைச்சார்ந்த இடமும். முல்லைக்குரிய நிலம், காடும் அதைச்சார்ந்த இடமும். மருதத்துக்குரிய நிலம், பழனமும் அதைச்சார்ந்த இடமும். நெய்தலுக்குரிய நிலம், கடலும் அதைச்சார்ந்த இடமும்.

கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் என்னும் பெரும்பொழுதாறிலும், மாலை யாமம் வைகறை காலை நண்பகல் எற்பாடு என்னும் சிறுபொழுதாறிலும், குறிஞ்சிக்குச் சிறந்தன கூதிரும் யாமமும் முன்பனியும்; பாலைக்குச் சிறந்தன வேனிலும் நண்பகலும் பின்பனியும்; முல்லைக்குக் காரும் மாலையும்; மருதத்துக்கு வைகறையும்; நெய்தலுக்கு எற்பாடுமாம். பெரும்பொழுதாறும் மருதத்துக்கும் நெய்தலுக்கும் சிறந்தனவாம்.

அவ்வந் நிலத்துக்குரிய தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையும் தொழிலும் யாழும் பண்ணும் ஊரும் நீரும் பூவும் தலைவரும் மக்களும் என்பன பதினொன்கும் கருப்பொருள் எனப்படும்.

ஐந்திணையும் முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்னும் மூன்றாலும் உரைக்கப்படும். இவ்வைந்திணையிடமாகக் களவும் கற்பும் என இரண்டொழுக்கம் நிகழும். விதியின் வழியே ஒருவன் கந்தர்வ நெறியாலே ஒருத்தியை அடைவதே களவும், பின் அவளை முறையாக மணஞ்செய்துகொண்டு இல்லற நடத்தலே கற்புமாம். கைக்கிளை என்பது ஒருதலைக் காமமாதலாலும், பெருந்திணை என்பது பொருந்தாக் காமமாதலாலும், இவை யிரண்டும் அகப்புறம் எனப்படும்.

இங்ஙனம் தலைவனும் தலைவியும், உரிமைச் சுற்றத்தோடே கூடி நின்று மக்களைப் பெற்று இல்லற நடத்தி, பின் தாம் அதுகாறும் நுகர்ந்த காமத்தைத் தீதாகக்கொண்டு வெறுத்து, துறவற நிகழ்த்தி மெய்யுணர்ந்து வீடுபெறுவர். ஆகவே அகப்பொருளின் முடிந்த நோக்கமாவது வீடுபேறே.

**புறப்பொருளாவது.** அறமும் பொருளும் பற்றிப் புறம்பே நிகழும் ஒழுக்கமாம். அகம்போல ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லாரானும் அநுபவித்து உணரப்படுதலானும், இவ்வாறிருந்ததெனப் பிறருக்குக் கூறப்படுதலானும், இது புறமாயிற்று. அறமாவது, பெரியோர் நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். பொருளாவது, தரும மார்க்கத்திலே அரசநீதி துணைக் காரணமாக ஈட்டப்பட்ட மணி பொன் நெல் முதலாயின. பொருள் இம்மை மறுமை என்னும் இரண்டையும் பயக்கும். அறம் இம்மை மறுமையோடு வீட்டையும் பயக்கும்.

உயிர்க்குறுதியான நீதியும் உலகநிலையாமை முதலிய உண்மையும் வருண வொழுக்க முதலியனவும் உணர்தலான அறமும், அவ்வருணத்தார் தமக்குரிய தொழில் வகைகளால் ஈட்டுதலான பொருளும் கூறுவது புறப்பொருட்டிறனும். அரசனுக்கு வேற்றரசரை வெல்லுதலும் வேறு தேயங்களைக் கொள்ளுதலுமாகிய மறச்செய்கையே பொருளீட்டும் அறநெறியாதலின், அரசனுடைய போர்முறைகளையும் புறப்பொருள் விரித்துரைக்கின்றது. இவற்றையெல்லாம் வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்னும் எழுவகைத் திணைகளாக வகுத்துக் கூறுவதாகும் புறப்பொருளின் நோக்கம். வெட்சியாவது — பகைவருடைய பசுக்களைக் கவர்தல். வஞ்சி — பகைவர்மேற்செல்வது. உழிஞை — பகைவருடைய மதிலை முற்றல். தும்பை — மேற்சென்ற வேந்தரைப் பொருதழித்தல். வாகை — வெற்றி. காஞ்சி — நிலையாமை. பாடாண் — தேவரையும் மக்களையும் பரவலும் புகழ்தலும். காஞ்சியும் பாடாணும் புறப்புறம் எனப்படும். இத்திணைகளின் குறியீடுகள் பூக்களாற் போந்த காரணக்குறிகளாம்.

சங்கச்செய்யுள்களில் எட்டுத்தொகையில் அகப்பொருள் உரைப்பன நற்றிணை — குறுந்தொகை — ஐங்குறுநூறு — கலித்தொகை — அகநானூறு என்பன: புறப்பொருள் உரைப்பன பதிற்றுப்பத்து — புறநானூறு என்பன. பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டும் நெடுநல்வாடையும் குறிஞ்சிப்பாட்டும் பட்டினப்பாலையும் ஒருவாறு அகப்பொருள் உரைப்பன. பதினெண் கீழ்க்கணக்கில் கார்நாற்பதும் ஐந்திணை நான்கும் அகமே உரைப்பன: களவழி நாற்பது புறமே உரைப்பது. இன்னிலை இரண்டும் உரைக்கின்றது.

முற்காலத்துப் புலவர் இயற்றிய இலக்கியங்களில் உரைத்துள்ள பொருள்களை ஆராய்ச்சி செய்து, அவற்றின் நியதியைக் கடைப்பிடித்துப் பாகுபடுத்தி உரைப்பதே பொருளிலக்கணமாம். இந்நியதி காலப் போக்கிலே வேறுபடுதல் இயற்கையாதலின், பொருளிலக்கணத்துக்குப் பிற்கால இலக்கியங்களை உதாரணம் காட்டுவதும், பிற்கால இலக்கியங்களுக்குப் பொருளிலக்கணத்தை மேற்கோள் காட்டுவதும், வெருவாய்ப் பொருந்துவதில்லை. தமிழ் நாட்டின் மிகப் பழைய கால நிலைமையை அறிவதற்குப் பொருளிலக்கணம் சாதனமாகின்றது. சரித்திர வுணர்ச்சியில்லாத உரையாசிரியர்கள், பொருளிலக்கணத்தையும் வடமொழி மிருதிகளையும் மயங்க உணர்ந்து, சிற்சில இடங்களில் ஒன்றை ஒன்றாக உரைப்பாராயினர். இயன்றமட்டில் அகத்திணை புறத்திணைகளையும் சங்க இலக்கியங்களையும் நுனித்துணர்வோர் முற்காலத்துத் தமிழ் நாட்டின் நாகரீக நிலைமையை நன்குணர்தல் கூடும்.

திருக்குறளை ஒருவாறு பொருளிலக்கணத்துக் கேற்பப் பிற்காலத்தில் பொதுவகையால் இயற்றிய இலக்கியமாகக் கொள்ளுதல் பொருந்தும்.

பிற்காலத்தில் வகுக்கப்பட்ட தொண்ணூற்றாறு பிரபந்தவகைக ளில் ஒன்றான கோவை என வழங்கும் இலக்கியங்கள், பொருளி லக்கணத்தில் அகப்பொருளில் பல கொண்டும், புதுவதாகச் சில கற் பித்தும், ஒரு தலைவனும் ஒரு தலைவியும் களவும் கற்பும் நிகழ்த்தியவா றாகக் கோவைப்படுத்தி, வழிபடுகடவுளையோ வள்ளலொருவனையோ பாட்டுடைத் தலைவனாக வைத்து அவன் சிறப்பு விளங்க உரைப்பன வாயின. இன்ன இலக்கியங்கட்கு நாற்கவிராஜநம்பி யகப்பொருள் இலக்கணமாயிற்று.

## பாயிரம்.

### மூவகை நூல்.

முதல்வழி சார்பென நூல்மூன் றாகும். (5)

### முதனூல்.

வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும். (6)

### வழிநூல்.

முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும் (7)

### சார்புநூல்.

இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும். (8)

### நூலுக்குப் பத்துக் குற்றம்.

குன்றக் கூறல் மிகைப்படக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை
என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே. (12)

நூலுக்குப் பத்தழகு.

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு தாரணத்த
தாகுதல் நூலிற் கழகெனும் பத்தே. (13)

சூத்திரம்.

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம். (18)

உரையின் பொதுலக்ஷணம்.

பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரம் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே. (21)

சிறப்புப்பாயிரத்தின் பொதுவிதி.

ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே. (47)

காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே. (48)

நூற்பெயருக்குச் சிறப்புவிதி.

முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மை முதனிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே. (49)

பாயிரம் நூலுக்கு இன்றியமையாமை.

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே. (54)

# முக்கியமான இலக்கணங்கள்.

அகப்பொருள் (களவியல்)—இறையனார். உரை நக்கீரர் எழுதியது.

அகப்பொருளிலக்கணம்—நாற்கவிராச நம்பி.

இலக்கணக்கொத்து—சுவாமிநாத தேசிகர் (ஈசான் தேசிகர்).

இலக்கண விளக்கம்—வைத்தியநாத நாவலர். உரை அவரே எழுதியது. இலக்கண விளக்கச் சூறாவளி என்று இதற்கு மறுப்பு எழுதினவர் சிவஞான முனிவர்.

ஐந்திலக்கணத் தொன்னூல்—தைரியநாத சுவாமிகள் (வீரமாமுனிவர்—Father Beschi).

குவலயானந்தம்—மாணிக்கவாசகத் தம்பிரான்.

சின்னூல் நேமிநாதம்—குணவீர பண்டிதர்.

தண்டியலங்காரம்—தண்டியாசிரியர். உரையெழுதினவர்—சுப்பிரமணிய தேசிகர்.

தொல்காப்பியம்—தொல்காப்பிய முனிவர். உரையெழுதினோர்—இளம்பூரணர் (உரையாசிரியர்), கல்லாடர், சேனாவரையர் (சொல்லதிகாரமாத்திரம்), பேராசிரியர், நச்சினார்க்கினியர். பாயிரவிருத்தியும் முதற் சூத்திர விருத்தியும் எழுதினவர் சிவஞானமுனிவர்.

நன்னூல்—பவணந்தி முனிவர்—முதலுரை எழுதினவர் மயிலைநாதர். அது காண்டிகையுரை. விருத்தியுரை எழுதினவர் சங்கர நமச்சிவாயப்புலவர்; இது சிவஞான முனிவரால் திருத்தப் பெற்றது. பிற்காலத்துக் காண்டிகையுரை எழுதினோர்—இராமாநுஜ கவிராயர்—சரவணபெருமாளையர்.

பிரயோக விவேகம்—சுப்பிரமணிய தீக்ஷிதர்.

மாறனகப்பொருள், மாறனலங்காரம்—திருக்குருகைப் பெருமாள் கவிராயர். அலங்காரத்துக்கு உரையெழுதினவர் கவிராஜகேசரி திருமேனி இரத்தின கவிராயர்.

யாப்பருங்கலக்காரிகை — அமிர்தசாகரமுனிவர். உரையெழுதினவர் குணசாகர முனிவர்.

யாப்பருங்கலம்—அமிர்தசாகரமுனிவர்.

வீரசோழியம்—புத்தமித்திரர். உரையெழுதினோர்—பெருந்தேவனார்.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
FEB 1919
MADRAS.

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS—1918.